Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

08.04.2020 077 316 5555 புதன்கிழமை

## ரூபா இன்னும் சரிவு!

கொழும்பு, ஏப். 8
கொரோனா வைரஸ் தாக்கத்தால் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. மத்திய வங்கி இன்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 200.46 ரூபாவாகவும், கொள்வனவுப் பெறுமதி 193.95 ரூபாவாகவும் வரை யறுக்கப்பட்டருந்தது.

2

## இன்னும் இரு வாரங்கள் ஊரடங்கு நீடிக்கும்!

### இடையிடையே தளர்த்தவும் வாய்ப்பு

கொழும்பு, ஏப். 8
நாடு முழுவதும் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்தும் குறைந்தது இன்னும் இரு வாரங்களுக்கு நடைமுறையில் வைத்திருக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. அடுத்த இரண்டு வாரங்கள் கொரோனா நிலைமை தீவிரமடைய

2

## யாழில் ஊரடங்கு தொடரும்

19 மாவட்டங்களில் நாளை 10 மணி நேரம் தளர்வு

கொழும்பு, ஏப்.8
யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய 6 மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி விசேட செயலணி இன்று

2

## நிவாரண விநியோகத்தில்

# அரசியல்வாதிகளின் தலையீட்டை தடுக்குக!

### ஆளுநருக்கு வட மாகாண அவைத்தலைவர் கடிதம்



யாழ்ப்பாணம்,ஏப்.8
அரச அலுவலர்களது செயற்பாடுகளில் சில அரசியல் வாதிகள் தலையீடு செய்வதை ஏற்க முடியாது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சீவி.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

2

## இன்றும் மூவருக்கும் கொரோனா

### தொற்று 188 ஆகியது

கொழும்பு, ஏப். 8
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் மூவர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

2

## களுத்துறையில் மினி 'சுனாமி'!

### பல வீடுகள், 28 விடுதிகள் பாதிப்பு

களுத்துறை, ஏப். 8
களுத்துறை பகுதி கடலில் திடீரென உருவான பேரலை காரணமாக சுமார் 28 சுற்றுலா விருந்தகங்களும் குடியிருப்புகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2



## அவலத்தில் வடக்கு மக்கள்; உடன் நடவடிக்கை எடுங்கள்

### ஆளுநருக்கு மாவை அவசர கடிதம்

கொழும்பு, ஏப்.8
ஊரடங்குச் சட்டத்தால் வடக்கு மாகாண மக்கள் அவலத்தைச் சந்தித்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் வேலையற்றோர், நாளாந்தத் தொழிலாளர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள், போரின் காரணமாகப் பெண் தலைமைத்துவக்

2



## 24 மணிநேரத்தில் 1, 815 பேர் கைது!

கொழும்பு, ஏப்.8
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் இன்று புதன்கிழமை காலை 6 மணி வரையான 24 மணி நேரத்தில் ஆயிரத்து 815 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 595 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
பொலிஸ் ஊரடங்குச் சட்டம், கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் பிறப்பிக்கப்பட்ட அன்று முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியினுள் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 17 ஆயிரத்து 717 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-22)

## 50,000 கிலோ சீனி வவுனியா வந்தது

யாழ்ப்பாணம், ஏப். 8
வவுனியா மாவட்டத்தின் தேவைக்காக 50 ஆயிரம் கிலோ சீனி எடுத்து வரப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு மக்களுக்கு விநியோகிக்க ஏற்கனவே 48 ஆயிரம் மீன் ரின் எடுத்து வரப்பட்

2

## கொரோனா விசாரணைக்குழு அமைக்க வேண்டும் ஐ.நா

கொழும்பு, ஏப். 8
'கொரோனா' வைரஸின் பின்புலம், அது உலக நாடுகளுக்கு பரவிய விதம் ஆகியன தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விஷேட குழுவொன்றை நியமிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் தமது அமைப்பு கோரிக்கை விடுக்கவுள்ளது

2

# ரூபா இன்னும் சரிவு!

இது நேற்றுமுன்தினம் இருந்த விற்பனைப் பெறுமதியை விட 1.06 ரூபா அதிகமாகும். இலங்கை வரலாற்றில் அமெரிக்க டொலர் 199 ரூபாவுக்கு விற்கப்பட்ட முதல் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி பதிவானது. இந்தநிலையிலேயே இன்று 200 ரூபாவைத் தாண்டியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலக பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. இலங்கையில் முக்கியமான துறைகள் முடங்கியுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரூபாவின் பெறுமதி பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கொரோனா தொற்று நீடிக்கும்நிலையில்ரூபாவின் பெறுமதி இன்னும் மோசமான நிலைக்குச் செல்லும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (த-44)

# இன்றும் மூவருக்கு...

அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை இன்று 188 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை 42 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். 6 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில், ஏனைய 140 நோயாளிகளும் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். 228 பேர் 22 மருத்துவமனைகளில் கண்காணிப்பில் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

# கொரோனா விசாரணைக்குழு அமைக்க வேண்டும் ஐ.நா

என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கான சட்டரீதியிலான வழிமுறைகள் தொடர்பிலும், சர்வதேச சட்டதிட்டங்கள் சம்பந்தமாகவும் தமது சட்டத்தரணிகள் குழு ஆராய்ந்து வருகின்றது என்றும் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் வித்தானகே 'உதயனிடம்' தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் தாயகமாக சீனாவே கருதப்படுகின்றது. எனினும், தற்போது 203 நாடுகளில் பரவி வையகத்துக்கே பெரும் அச்சுறுத்தலாக அந்த வைரஸ் மாறியுள்ளது. அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் வல்லரசு நாடுகள்கூட விழிபிதுங்கி நிற்கின்றன. பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் வைரஸை மையப்படுத்தி சீனாவிடம் இழப்பீடு கோருவதற்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் தனிநபர்களும், நிறுவனங்களும் சட்டநடவடிக்கைக்கு தயாராகிவருகின்றன. இந்த நிலையிலேயே இலங்கையிலும் தனிநபர்கள் குழுவொன்று இதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. அது தொடர்பில் உதயனிடம் கருத்து வெளியிட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் வித்தானகே கூறியதாவது:

"சீனாவின் வுஹான் மாகாணத்தில்தான் கொரோனா வைரஸ் உருவானது. அது பீஜிங்வரை பரவாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்த சீன அரசு உலக நாடுகளுக்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. முன்னெச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. இதனால் இன்று முழு உலகமுமே அல்லப்படுகின்றது. இதற்கான பொறுப்பை சீனா ஏற்கவேண்டும். இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சிறப்புக் குழுவொன்றை அமைக்குமாறு ஐ.நாவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

தனி மனிதனுக்கு சுகாதார ரீதியில் அச்சுறுத்தல் ஏற்படுவதுகூட மனிதஉரிமை மீறலாகும். எனவே நீதிகேட்டு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமா என எமது சட்டத்தரணிகள் குழு ஆராய்ந்து வருகின்றது. இன்னும் இரு வாரங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றார். (த-44)

# களுத்துறையில்....

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மாலையில் சாதாரணமாக இருந்த கடல் திடீரென உள்வாங்கி, பின்னர் பேரலையாக மாறி கடற்கரையைத் தாண்டி குடியிருப்புகளுக்குள் நுழைந்துள்ளது. 'சுனாமி அலை வந்துவிட்டது என்றே பயந்து ஓடினோம்" என அலையை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். இந்த அலைகாரணமாக பல வீடுகளும், 28 விருந்தகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. (த-114)

# அரசியல்வாதிகளின்...

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த மாத ஆரம்பத்திலிருந்து கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அமுல் செய்யப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மற்றும் சுய தனிமைக் கட்டுப்பாடுகள் என்பன வற்றை எதிர்கொள்வதில் வடமாகாண மக்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர். சில ஊடகச் செய்திகளின் படி ,சில அரசியல்வாதிகள் அரச அலுவலர்களது செயற்பாடுகளில் தலையீடு செய்யும் நிலைமை கண்டிக்கத்தக்கது. அவ்வாறான நிலைகளைத் தவிர்த்து அரசாங்க அலுவலர்கள் அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவை ஊடாக வழங்கப்படும் அறிவுறுத்தல்களை மட்டும் நடைமுறைப்படுத்துவதையும், பாதிப்புக்குள்ளானோருக்கு உதவ விரும்புபவர்கள் தங்களிடம் வழங்கும் பொருள்கள் அல்லது நிதி தங்களுடைய பணிப்பிற்கமைய நிறைவேற்றப்படுவதையும், வேறெந்த அரசியல்வாதியும் அவற்றில் தலையீடு செய்யாதிருப்பதை உறுதி செய்யுமாறும், அவ்வாறான நெருக்குதல் அலுவலர்களுக்கு ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் தங்களுக்குரியது. ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் இன்னும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான நிலையை சீர் செய்து சகல நிவாரண உதவிகளும், எல்லோரையும் சென்று நடைவதை மீளாய்வு முறையில் உறுதி செய்யுமாறு வேண்டுகின்றேன். அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவை மட்டுமல்லாது, ஏனைய பொருள்களையும் மக்கள் சிரமமின்றி பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். எமது பிரதேச வர்த்தகர்கள் தம்மால் இயன்ற சேவைகளை வழங்குகின்ற போதும், அவற்றில் காணப்படும் குறைபாடுகள் அல்லது போதாமை தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான செயல்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

போர்க்காலத்தில் கூடுதலாக நிவாரண விநியோகங்களில் கூட்டுறவுத்துறை ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. ஆனால் தற்பொழுது முழுமையாகச் செயற்படுவதற்கான நிதி வசதி இல்லாமை ஒரு பிரச்சினையாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே சங்கங்களின் நிர்வாக இயலுமையைப் பரிசீலித்து, அவர்களுக்கான போதிய கடன் வசதிகளை வழங்கி, அத்தியாவசிய பொருள்கள் விநியோகத்தில் அவற்றை ஈடுபடுத்தலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். உணவுப் பொருள்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலையில் அதனால் அதிகரித்த விலையும் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகுவது தவிர்க்க முடியாததாகும். எனவே போதிய நெல் கொள்வனவை மேற்கொண்டு உள்ளூரில் இருக்கக் கூடிய அரிசி ஆலைகள் மூலம் அரிசி உற்பத்தியை மேற்கொள்வதற்கும் சங்கங்கள் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். எனவே கூட்டுறவு அபிவிருத்தி வங்கியிடமிருந்து இவர்களுக்கான கடன் உதவியைப் பெற்றுக் கொடுக்க முடியும் - என்றுள்ளது. (க-105 24)

# இன்னும் இரு வாரங்கள்...

லாம் என்று மருத்துவ நிபுணர்கள் விடுத்த எச்சரிக்கையையடுத்து அரசு இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதன்படி குறிப்பிட்டளவு கால அவகாசம் இடையிடையே மக்களுக்கு வழங்கி ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறையில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று அறியமுடிகின்றது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்ட 188 பேரில் தற்போது 140 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். சீனப் பெண் உள்ளடங்கலாக இதுவரை 42 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதுவரை 06 பேர் உயிரிழந்துள்ளனர். மருத்துவமனைகளில் தற்போது 255 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு வாரங்களில் தற்போதைய எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது. இந்தநிலையிலேயே, ஊரடங்கை நாடு முழுவதும் தொடர்வதற்கும், இடையிடையே அதை நீக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அதிக விலைக்குப் பொருள்களை விற்போர் தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்தில் முறையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# அவலத்தில் வடக்கு மக்கள்....

குடும்பங்கள், பொதுவாக வாழ்வாதாரமற்றவர்கள், ஊட்டச்சத்தற்ற குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் முதலான தொகுதியினருக்கு உணவோ, உணவைப் பெற உதவிகளோ வழங்கப்படாமை தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் கோரியுள்ளார். மாவை சேனாதிராஜா இன்று வடக்கு ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

இன்று (08) தங்களால் கூட்டப்படவுள்ள கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களின் பொருட்டு சில ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கின்றேன். அரசின் பிரதமரால் கூட்டப்படும் கட்சித்தலைவர்களின் கலந்துரையாடல் கூட்டம் போன்று, வட மாகாணத்திலும் மாவட்டங்களில் கூட்டம் நடத்துவது பயனுள்ளதாயிருக்கும். கடலுணவு மற்றும் வேளாண்மை உற்பத்திகள் சுகாதாரம் பேணல், விற்பனைக்கான உறுதிப்பாடு வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு ஏனைய மாவட்டங்களிலுள்ளவாறு குறைக்கப்பட வேண்டும், அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் கையிருப்பிலிருக்க வேண்டும். சாதாரண மக்களிடம் உணவுப் பொருள் வாங்கும் சக்தி முற்றாகவே இல்லை. பொருள்களை இவர்கள் வாங்குவதும் இலகுவானதல்ல. இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு முதலாவதாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பயன்பாடு உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போதிய நிதி வசதி வழங்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்காக ஆளுநர், பிரதம செயலாளர் உள்ளிட்ட மாகாண நிர்வாகம், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், மருத்துவ மற்றும் அத்தியாவசியத்துறைப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய நிர்வாகப் பொறிமுறை நிறுவப்படுவது தேவையாகின்றது- என்றுள்ளது. (எ-22)

# யாழில் ஊரடங்கு தொடரும்...

அறிவித்துள்ளது, ஏனைய 19 மாவட்டங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம், நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு தற்காலிகமாகத் தளர்த்தப்படவுள்ளது. பின்னர் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி விசேட செயலணி தெரிவித்துள்ளது. (எ-22)

# 50,000 கிலோ சீனி...

டிருந்தது. தற்போது 50 ஆயிரம் கிலோகிராம் சீனி எடுத்துவரப்பட்டுள்ளது. இவ்வாறு எடுத்து வரப்பட்டுள்ள சீனி கொழும்பில் 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை ஏற்றி இறக்கல், பாரவூர்திச் செலவுகளுடன் மொத்த விலை, சில்லறை விலை என்பவற்றை நிர்ணயிப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது. ஆயினும் உச்ச பட்ச சில்லறை விலையான 115 ரூபாவுக்குள் சீனியை விற்பனை செய்ய முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-105)

## 140 குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 8

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை மேற்கு, தொல்புரம் கிழக்கு, மூளாய் மேற்கு ஆகிய பகுதிகளில் 140 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. சுவிட்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவை யினரின் நிதி அனுசரணையில் 'வெளிச்சம்' நிறுவனம் இவற்றை வழங்கியது என்று தெரிவிக்கப்பட்டது. (த)



## மடுவில் நேற்று வழிபாடு

தலைமன்னார், ஏப்.8

உலகம் முழுவதும் கொரோனா நோயால் துன்பப்படும் மக்களுக்காக பிரார்த்திப்போம் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார். கொரோனா நோயை ஒழிக்க வேண்டி நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் மடு அன்னையை திருப்பீடத்தில் வைத்து விஷேட வழிபாடு நடைபெற்றது.

அதில் மறையுரை நிகழ்த்தும் போதே ஆயர் மேற்கண்டவாறு கூறினார்.

"எத்தனையோ பேர் உழைப்பின்றித் தவிக்கின்றனர். இன்னும் எத்தனையோ பேர் உணவின்றிப் பட்டினியால் வாடுகின்றனர். வருமானம் இன்றிப் பலர் துன்பங்களுக்கு ஆளாகி உள்ளனர். இந்த நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களுக்காக மருத்துவத் தரப்பினர் கடுமையாக உழைக்கின்றனர். இந்தக் குழப்ப நிலையில் நாம் மருதமடு மாதாவிடம் கையேந்துகின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார். (த-60,56)

## மர்மப்பொருள் வெடித்து சிறுமி காயம்

கொழும்பு,ஏப்.8

மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில், சிறுமியொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் பண்டாரவளைப் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கினிகமப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

11 வயதுடைய சிறுமியொருவரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் விளையாடுவதற்காக கையில் வைத்திருந்த பொருளே வெடித்துள்ளது. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

# தேர்தலைப் பிற்போட இடமளிக்க முடியாது!

### வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.8

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியினர் தற்போதைய நிலைமையைச் சாதகமாகக் கொண்டு பொதுத் தேர்தலைப் பிற்போட முயற்சிக்கின்றனர். அதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன், பொதுத் தேர்தல் அடுத்த மாதத்துக்குள் நடத்தப்படும்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு சர்வ கட்சி கூட்டத்தில் எதிர்தரப்பு அரசியல் கட்சித்தலைவர்கள் இணக்கம் தெரிவிக்கின்றார்கள். ஆனால் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான முரண்பாடான கருத்துக்களை குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள். நாடாளுமன்றத்தை கூட்டுவதால் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வை காண முடியாது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மக்களின் விமர்சனங்களுக்கு உள்ளானது. இதன் காரணமாகவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை விரைவாக கலைத்து மக்களுக்கான அரசைத் தெரிவு செய்யத் தீர்மானித்தார்.

பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் இம்மாதம் இடம்பெறவிருந்த பொதுத்தேர்தலை பிற்போட வழி செய்தது. தற்போதைய நிலைமையினை வெற்றி கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றது. அடுத்த மாதத்துக்குள் பொதுத் தேர்தலை நடத்தும் முயற்சிகளே அதிகம் உள்ளன- என்றார். (எ)



## உறவுகளின் போராட்ட இடம் கொரோனாவால் மாறியது

கொழும்பு, ஏப்.8

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக்கண்டறியும் வவுனியா உறவுகள் தமது போராட்டத்தை தற்காலிகமாக வீடு ஒன்றில் தொடர்கின்றனர். உலகம் முழுவதும் வேகமாகப் பரவி உயிர் அச்சுறுத்தலையும், இறப்பையும் ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையையும் விட்டுவைக்கவில்லை. இந்த நிலையில் அவர்கள் போராட்ட இடத்தை மாற்றியுள்ளனர்.

அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து ஆயிரத்து நூறு நாள்கள் கடந்தும் ஏ-9 வீதி வவுனியாவில் தொடர்ந்து வந்த நிலையில், தற்போது இடம் மாற்றப்பட்டுள்ளது. அவர்களின் போராட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆயிரத்து 144 நாள்களை எட்டியுள்ளது. அந்தக் குடும்பங்களுக்கு 'உறவுகளுக்குக் கை கொடுப்போம்' அமைப்பினர் அத்தியாவசிய உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர். (த)

## 300 குடும்பங்களுக்கு பாண்கள் கையளிப்பு

வேலணை,ஏப்.8

வேலணை பிரதேச சபை உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதனால் 300 குடும்பங்களுக்கு நேற்று பாண்கள் வழங்கப்பட்டன. பிரதேச சபை உறுப்பினரின் தாயின் 11 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.



யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக அமுலில் உள்ளதால் அன்றாடம் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தும் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வேலணைப் பிரதேசத்தை சேர்ந்த மக்களுக்கு ஒரு வேளை உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்தப் பாண்கள் வழங்கப்பட்டன. (ஐ-7)





கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இலங்கை உட்பட உலக நாட்டு மக்கள் நலம் பெறவேண்டி வாழைச்சேனை முறாவோடை சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட யாகம் நேற்று இரவு நடைபெற்றது. (ஐ-150)



# கோலியை சீண்டுவதற்கு அஞ்சினர் ஆஸி. வீரர்கள்

## கிளார்க் விளாசல்



புதுடெல்லி, ஏப். 8
விராட் கோலியையும் அவர் தலைமையிலான ஆஸ்திரேலிய வீரர்களையும் சீண்டுவதற்கு ஆஸ்திரேலிய வீரர்கள் அச்சத்துடன் நடந்து கொண்டனர் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க்.
இது தொடர்பில் கிளார்க் மேலும் தெரிவித்ததாவது: கிரிக்கெட் ஆட்டத்தின் நிதிநிலைமைகளைப் பொறுத்த வரை இந்தியா எப்படி பலம் பொருந்தியது என்பதை அனைவரும் அறிவார்கள். சர்வதேச கிரிக்கெட்டிலும் சரி உள்நாட்டில் ஐ.பி.எல் தொடரிலும் சரி. ஆஸ்திரேலிய அணி, சிலபல வேளைகளில் கோலியையும் அவர் தலைமையிலான இந்திய அணியையும் எதிர்த்து வார்த்தை மோதலில் ஈடுபடுவதற்கு அச்சத்துடன் நடந்து கொண்டது. ஏனைய அணிகளும் அவ்வாறான போக்கைக் கடைப்பிடித்தன. இதற்கு ஐ.பி.எல் தொடரில் கிடைக்கும் பணமழை ஒரு காரணம். வீரர்கள் என்ன நினைத்தார்கள் என்றால்: நான் கோலியை ஸ்லெட்ஜ் செய்யப்போவதில்லை. என்னை அவர் பெங்களூரு அணிக்கு எடுக்க வேண்டும். 6 வாரங்களுக்கு நான் 1 மில்லியன் அமெரிக்க டாலர்களை சம்பாதிக்க வேண்டும், என்றே வீரர்கள் பலரும் நினைத்தனர். இந்த மாதிரி காலக்கட்டத்தில்தான் ஆஸ்திரேலிய அணி மென்மையாகப் போனது, அதன் வழக்கமான ஆக்ரோஷ பாணி காணாமல் போனது - என்றார். (ம)

# ஒப்பந்தம் நீடிப்பு

பெர்லின், ஏப். 8
ஜேர்மனி கால்பந்து லீக் அணியான பெயர்ன் முனிச்சுடன் மேலும் இரண்டு வருடத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்துள்ளார் தோமஸ் முல்லர்.
ஜெர்மனியைச் சேர்ந்த 30 வயதான தோமஸ் முல்லர் கடந்த 20 வருடங்களாக பெயர்ன் முனிச் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் விளையாடிய காலகட்டத்தில் பெயர்ன் முனிச் 8 முறை கிண்ணம் வென்றுள்ளது. 2013ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக்கை கைப்பற்றியுள்ளது. முல்லர் மூனிச் இடையிலான ஒப்பந்தம் அடுத்த வருடத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையில் அந்தக் கழகத்துடன் ஒப்பந்தத்தை நீடித்தார் முல்லர். (ம)

# பூட்டிய மைதானத்துக்குள் ஐ.பி.எல் விளையாடலாம்!

புதுடெல்லி, ஏப்.8
இந்த வருட ஐ.பி.எல் தொடரை பூட்டிய மைதானத்துக்குள் நடத்துவதற்கு பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்தார் சென்னை சுப்பர் கிங்ஸின் நட்சத்திரவீரர்ஹர்பஜன்சிங்.
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஐ.பி.எல் தொடர் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது. ஆனால் அந்தந்த மாநில அரசுகள் ஊரடங்கை நீட்டிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்காவிடில் போட்டி நடைபெறும் என கிரிக்கெட் வீரர்கள் நம்புகிறார்கள். அப்படி சாத்தியம் இருந்தால் போட்டியை ரசிகர்களின்றி பூட்டிய மைதானத்துக்குள் நடத்தலாம் என ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து ஹர்பஜன் சிங் மேலும் தெரிவித்ததாவது: "பார்வையாளர்கள் மிகவும் முக்கியமான பகுதிதான். ஆனால் தற்போது உள்ள சூழ்நிலையில் அவர்கள் இல்லாமல் போட்டியை நடத்தலாம். ஒரு வீரராக நான் இவ்வாறு சிந்திக்கக்கூடாது. ஆனால் தற்போதைய சூழ்நிலை அவ்வாறான நிலையில் உள்ளது - என்றார். (ம)

# 2 தேசிய அணிகள்

## பட்லரும் பரிந்துரை

லண்டன், ஏப். 8
கொரோனாவின் தாக்கம் சுமூகமானதை அடுத்து இரண்டு தேசிய அணிகளை உருவாக்கி விளையாட அனுமதிக்கும் திட்டத்தைப் பரிந்துரைத்துள்ளார் பட்லர்.
கொரோனா வைரஸ் காரணமாக சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்கள் பலவும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏராளமான தொடர்களைக் கைவிட வேண்டி வரலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தொடர்கள் கைவிடுவதற்குப் பதிலாக இரண்டு தேசிய அணிகளை விளையாட அனுமதிக்கலாம் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன் பரிந்துரைத்திருந்தார். அதே கருத்தை தற்போது பட்லரும் பரிந்துரைத்துள்ளார். (ம)



# வோர்ணின் தெரிவில் சச்சினுக்கு இடமில்லை



புதுடெல்லி, ஏப்.8
ஷேன் வோர்ண் இதுவரை ஐ.பி.எல் தொடரில் விளையாடிய வீரர்களை வைத்து சிறந்த லெவன் அணியை அறிவித்துள்ளார். அதில் சச்சினுக்கு இடம் கொடுக்கப்படவில்லை.
வோர்ணின் அணித் தெரிவு வருமாறு: ரோஹித் சர்மா, சேவாக், விராட் கோலி, யுவராஜ் சிங், யூசுப் பதான், டோனி, ஜடேஜா, ஹர்பஜன் சிங், ஷகீர் கான், சித்தார்த் திரிவேதி, முனாப் படேல் என்றவாறாக அமைந்துள்ளது வோர்ணின் தெரிவு. (ம)





# திறக்கப்பட்டது வுகான்

வுகான், ஏப். 8
கொரோனா வைரஸால் முடக்கப்பட்டிருந்த சீனாவின் வுகான் நகரம் சுமார் 76 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
சீனாவின் வுகான் மாநகரில்தான் கொரோனா வைரஸ் முதன்முதல் அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் சீனாவெங்கும் விரைவாகப் பரவிய கொரோனா தற்போது முழு உலகிலும் வியாபித்துள்ளது. கொரோனா வைரஸால் உலக அளவில் 14 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கொரோனாவின் பிறப்பிடமான வுகான் நகரம் சீன அரசால் முழுவதுமாக முடக்கப்பட்டிருந்தது. அங்கு தற்போது கொரோனா முழுவதுமாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வுகான் நகரம் 76 நாள்களுக்குப் பின்னர் இன்று மீண்டும் திறக்கப்பட்டது. (ம)



## போரிஸின் உடல்நிலை முன்னேற்றம்

கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் உடல்நிலையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கடந்த சில நாள்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். நேற்றுமுன்தினம் போரிஸின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நிலையில் போரிஸின் உடல்நிலையில் தற்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஒரே நாளில் 1,970 இறப்பு

## கொரோனாவின் பிடியால் இறுகுகின்றது அமெரிக்கா



வொஷிங்டன், ஏப்ரல் 8
கொரோனாவின் தாக்கம் அமெரிக்காவில் மேலும் வலுப்பெற்றுள்ளது. நேற்று மட்டும் 1,970 பேர் உயிரிழந்துள்ளனர்.
சீனாவில் டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவியுள்ளது. இந்த வைரஸால் அமெரிக்கா மிகமிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 4 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஆரம்பத்தில் தினமும் 100 தொடக்கம் 200 என்றவாறாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தற்போது தினமும் 1,500 தொடக்கம் 2,000 என்றவாறாக மாறியுள்ளது. இந்த இமாலய உயிரிழப்புக்களால் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது அமெரிக்கா.
அமெரிக்காவில் நேற்றுமட்டும் 1,970 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 33 ஆயிரத்து 500 பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதுவரை அமெரிக்காவில் சுமார் 13 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

## ஆப்கனுடனான பேச்சிலிருந்து விலகியது தலிபன்

காபுல், ஏப். 8
ஆப்கானிஸ்தான் அரசுடனான பேச்சை கைவிட்டது தலிபன் அமைப்பு. இன்று மதியம் இந்த அறிவிப்பை அந்த அமைப்பு விடுத்தது.
ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக நீடிக்கும் உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வர தலிபன் பயங்கரவாத அமைப்புடன் அமெரிக்கா பல மாதங்களாக பேச்சு நடத்தியது. கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இருதரப்புக்கும் இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக தலிபன் அமைப்பின் 5,000 கைதிகளை ஆப்கானிஸ்தான் அரசும், ஆப்கானிஸ்தானின் சிப்பாய்களை தலிபன்களும் விடுவிக்க வேண்டும் என்பது அமைந்துள்ளது. எனினும் தலிபன் கைதிகளை விடுவிக்க ஆப்கன் அரசு பின்னடித்து வந்தது. இதனால் அமெரிக்கா - தலிபன் இடையிலான பேச்சு கைவிடப்படும் என்றும், இனி நடைபெறவுள்ள ஆப்கன் தலிபன் இடையிலான பேச்சும் கைவிடப்படும் என்றும் தலிபன் எச்சரித்தது. இதையடுத்து ஆப்கன் அரசுடனான பேச்சில் இருந்து தலிபன் விலகியது. (ம)





# போரிஸுக்குச் சிகிச்சை வழங்குவதற்கு அமெரிக்கக் குழு லண்டன் விரைந்தது

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்குச் சிகிச்சை வழங்குவதற்காக அமெரிக்காவின் இரண்டு குழுக்கள் லண்டன் விரைந்தன.
இது தொடர்பில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸுடன் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டால் நிலமை மோசமாகி விடுகின்றது. போரிஸ் விரைவில் குணமடைய வேண்டும். போரிஸ் எனது நல்ல நண்பர். அவர் உண்மையிலேயே மகத்தானவர். திறமை வாய்ந்தவர். கொரோனாவில் இருந்து போரிஸை மீட்க வேண்டும். இதற்கான தீர்வுடன் இரண்டு மிகப்பெரும் அமெரிக்க நிறுவனங்கள் என்னை அணுகின. அந்த நிறுவனங்களின் குழுக்களை லண்டனுக்கு அனுப்பி வைத்துள்ளேன். அவர்கள் போரிஸுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளனர். அனைத்தும் சரியாக நடைபெறுகின்றன - என்றார். (ம)

## வவுனியாவிலுள்ள வெளிமாவட்டத்தவர் பதிவு செய்யுங்கள்

வவுனியா, ஏப். 8

வவுனியா மாவட்டத்துக்கு வந்து தமது சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப முடியாதுள்ள வெளிமாவட்டத்தவர்களை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேன கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளிமாவட்டங்களிலிருந்து பல்வேறு தேவைகளின் பொருட்டு பலர் வவுனியாவுக்கு வந்தநிலையில் ஊரடங்கு உத்தரவு மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, தமது சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனர். இவ்வாறானவர்கள் தமது விவரங்களை வவுனியாவில் உள்ள பிரதேச செயலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று மேலும் தெரிவித்தார். (த-110)

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.8

நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இலங்கை வங்கி தனது நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளது. ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதால் மக்கள் தமது வங்கித்தேவையை மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு இலங்கை வங்கியின் கொடிகாமம் கிளை யினர் தென்மராட்சி கிழக்கு பகுதியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடமாடும் சேவையை நடத்தவுள்ளனர்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை மிருசுவில் வடக்கு, உசன் கந்தசாமி கோவிலடி, தவசிகுளம் மிருசுவில் அல்லாரை மத்தி ஆகிய இடங்களில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. (ஐ-159)

# கொரோனோவைத் தடுக்க 7 படிமுறைகள்

### சுகாதாரப் பணியகம் அறிவுறுத்து

கொடிகாமம், ஏப். 8

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அனைவரும் இந்த 7 படிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

1. கைகளை அடிக்கடி முழுமையாக கழுவுங்கள் . உங்களுடைய வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்க்கவும்.
2. நீங்கள் இருமும்போது அல்லது தும்மும்போது உங்களுடைய வாயை மடித்த முழங்கை மூலம் அல்லது திசுக் கடதாசி மூலம் மறைத்து கொள்ளுங்கள்.
3. நீங்கள் திசுக் கடதாசியை உபயோகித்தால் உடனடியாக அதை மூடிய குப்பைத் தொட்டியினுள் இட்டு உங்கள் கைகளைக் கழுவுங்கள். அல்லது அற்ககோல் கொண்ட திரவத்தைப் பாவியுங்கள்.
4. சன நெரிசலான இடங்களைத் தவிருங்கள்.
5. நீங்கள் நலமில்லாது இருப்பதாக உணர்ந்தால் (காய்ச்சல் மற்றும் சுவாச நோயாளிகள்) வீட்டிலேயே இருங்கள்.
6. உங்களுக்கு நோய் அறிகுறிகள் (காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் தேவையான தொலைபேசி மூலம் மருத்துவ உதவியை பெறுங்கள்.
7. சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் சமீபத்திய தகவல்களைக் கொண்டு உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

தவிர, எனது நாடு எனது சமுதாயம் என்னுடைய நண்பர்கள் எனது குடும்பம் எனது கடமை என்பதை உணர்ந்து செயற்படவேண்டும் என்று பணியகம் அறிவித்துள்ளது. (த-159)



## கொரோனா சந்தேகம்; மாதிரிகள் சேகரிப்பு

வவுனியா,ஏப்.8

கொரோனோ வைரஸ் தொற்றுத் தொடர்பான பரிசோதனைக்கு மாதிரிகள் சேகரிக்கும் செயற்பாடு வவுனியா பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை மற்றும் சுகாதார மருத்துவ அலுவலகத்தால் இன்று முன்னெடுக்கப்பட்டது. கொரோனோ வைரஸ் தாக்கம் நாட்டில் அதிகரித்துவரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் யாழ்பாணம் மற்றும் வேறு பகுதிகளில் தொடர்புகளைக் கொண்டிருந்த வவுனியாவைச் சேர்ந்தவர்களிடம் கொரோனாத் தொற்று இருக்கின்றதா என்று பரிசோதனை செய்வதற்காக அவர்களிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியா குழுமாட்டுசந்திப் பகுதி,ஓமந்தை மற்றும் புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள சந்தேகத்துக்கு இடமானவர்களிடமிருந்தே குறித்த மாதிரிகள் பெறப்பட்டன.

அவை பரிசோதனைக்காக யாழ்ப்பாணப் பல்கலைகழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## கைக்குண்டு வைத்திருந்தவர் கைது

கொழும்பு, ஏப்.8

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவில், பரக்கும்புற பகுதியில் 3 கைக்குண்டுகளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் தம்பலகாமம் பொலிஸாரால் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர், தம்பலகாமம் பரக்கும்புற பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய திலகரட்ணம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தம்பலகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் அவருடைய வீட்டைச் சோதனையிட்டபோது மறைத்து வைத்திருந்த நிலையில் இக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-22)

## ஊரடங்கு பாஸ் முறைகேடு வாகனச் சாரதி கைதானார்

கொழும்பு, ஏப். 8

அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக, லொறி ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி , முச்சக்கரவண்டி ஒன்றில் சென்ற நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச்சம்பவம் அக்குறணை நகரில் இடம்பெற்றது.

ஊரடங்கு நேரத்தில் அத்தியாவசியத் தேவைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், பொருள்களைக் கொண்டு செல்லவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வாகனத்தை மாற்றிப் பயன்படுத்திய நபர் கைது செய்யப்பட்டார் என்று அலவத்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குறணை பிரதேசம் முழுமையாக முடக்கப்பட்டுள்ள நிலையில், அக்குறணைப் பிரதேசத்துக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மேற்படி நபர், அத்தியாவசிய பொருள்களைக் கொண்டு செல்வதற்காக லொறி ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரத்தை, முறைகேடாகப் பயன்படுத்தி முச்சக்கரவண்டி ஒன்றைச் செலுத்திக்கொண்டு அக்குறணை நகருக்கு வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-114)

## முல்லைத்தீவுக்கு 50,000 மீன் ரின் 5,000 கிலோ மா

முல்லைத்தீவு,ஏப்.8

கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருள்கள் பெற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் விநியோகம் செய்ய, 50 ஆயிரம் மீன் ரின் மற்றும் 5 ஆயிரம் கிலோ மா என்பன எடுத்து வரப்பட்டுள்ளன.

வடக்கின் 5 மாவட்டத்துக்கும் ஒரு லட்சத்து 55 ஆயிரம் கிலோ சீனி 117 ரூபா விலையிலும் , ஒரு லட்சம் கிலோ வெங்காயம் 160 ரூபா விலையிலும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் மீன் ரின் 100 ரூபா விலையிலும், 98 ரூபா விலையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசியும் அனுமதிக்கப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் பிரகாரம் உடனடியாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (க-105)

## கொரோனா நிதியத்துக்கு ஒரு நாள் சம்பளம்!

கொழும்பு, ஏப். 8

இலங்கை அரசின் கொரோனா வைரஸுக்கு எதிரான நிதியத்துக்கு உதவும் வகையில், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் 1800 ஊழியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை அரசுக்குக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

'கொவிட்19' சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை ஜனாதிபதி கடந்த 23ஆம் திகதி நிறுவியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# ஊரடங்கு வேளையில் ரவுடிகள் அட்டகாசம்

கிளிநொச்சி, ஏப். 8

பரந்தன் சிவபுரம் பகுதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ளவேளை நேற்றிரவு சென்ற ரவுடிக் கும்பல் ஒன்று தனியார் ஒருவரின் கடையை உடைத்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சிவபுரத்திலுள்ள சிலர் ஒன்றாகக் கூடி கசிப்பு காய்ச்சி வியாபாரம் செய்தல், கஞ்சா வியாபாரம், களவு, வழிப்பறி போன்ற சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களில் அதிகளவானவர்கள் 15 வயது தொடக்கம் 26 வயதைக் கொண்டவர்களாகவுள்ளனர். பெரியவர்களும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டாலும் குறுகிய நாள்களுக்குள் விடுவிக்கப்படுகின்றனர். இவர்களின் சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த எவரும் கவனமெடுப்பதாகத் தெரியவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கும்பலே குறித்த கடையையும் ஊரடங்கு வேளையில் உடைத்ததாக மக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (த)

# பதுக்கிய பொருள்களை மீட்டு விற்ற அதிகாரிகள்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஏப். 8

வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்த மீன் ரின், பருப்பு ஆகிய பொருள்களை பாவனையாளர் அதிகார சபையினர் வியாபாரிகளிடமிருந்து பறிமுதல் செய்தனர். பின்னர் அவற்றை அரசின் கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு விற்றுவிட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவங்கள் மட்டக்களப்பு நகரம், காத்தான்குடி, ஆரையம்பதி, செட்டிப்பாளையம், களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை மற்றும் கல்லாறு ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன.

மீட்கப்பட்ட பொருள்களில் மீன்ரின் தலா 100 ரூபாவுக்கும் பருப்பு ஒரு கிலோகிராம் 65 ரூபாவுக்கும் பாவனையாளர் அதிகார சபையின் புலனாய்வு அலுவலர்களின் மேற்பார்வையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. (த)

# மது விற்பனை செய்த 8 நிலையங்களுக்கு சீல்

### தலவாக்கலைப் பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஏப். 8

மதுபானம் விற்பனைசெய்ததாகக் கூறப்படும் 8 மது விற்பனை நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன என்று தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலவாக்கலை மற்றும் வட்டகொடை பகுதியில் மது விற்பனையில் ஈடுபட்ட நிலையங்களே நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டன.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மது விற்பனை நிலையங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவுக்கு கட்டம் கட்டமாக ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறித்த மதுபான விற்பனை நிலையங்கள் இயங்க வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் நடத்துநர்கள் மது விற்பனை நிலையங்களைத் திறந்து மதுபானப் போத்தல்களை தோட்டப் பகுதிகளுக்குக் கொண்டுசென்று விற்பனை செய்தனர் என்று மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனையடுத்து அங்கு பொலிஸார், அவ்வாறு விற்பனையில் ஈடுபட்டன என்று கூறப்படும் 8 மது விற்பனை நிலையங்களையே மறு அறிவித்தல்வரை சீல் வைத்து மூடினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)







# மனிதநேயப் பணியில் கரித்தாஸ்

மன்னார், ஏப்.8

கொரோனா வைரஸின் பாதிப்பு இலங்கையிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் கரித்தாஸ் வாழ்வுதயத்தால் , வடக்கிலுள்ள மக்களுக்கான மனித நேயப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான துண்டுப்பிர சுரங்களை வெளியிடுதல், பதாகைகளைக் காட்சிப்படுத்துதல், போன்ற செயற்பாடுகளின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, வைரசிலிருந்து பாதுகாப்பதற்கான முகக்கவசம், மற்றும் தொற்று நீக்கும் பொருள்களும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு மன்னார், மற்றும், வவுனியா மாவட்டங்களில் மிகவும் வறுமைக்குட்பட்ட மக்களுக்குத் தேவையான உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் நகரத்திலும் அதை அண்டிய பகுதிகளிலும் ஆரம்பத்தில் ஆயிரம் குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு கரித்தாஸ் வாழ்வுதயம் , ஆயர் இல்லம், கரித்தாஸ் இலங்கை என்பவற்றின் நிதி உதவியுடன் மடு, நானாட்டான் பிரதேசங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய நிவாரணப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன. (ப)

# லயன்ஸ் கழகத்தால் உதவி

சாவகச்சேரி, ஏப்.8

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரியில் வதியும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் போசாக்கு மாத்திரைகளையும் பனடோல்களையும் நேற்று முன்தினம் வழங்கியுள்ளனர். கழகத்தின் தலைவர் லயன் து. இளங்குமரன் தலைமையில் கோயிற்குடியிருப்பு மீசாலை சங்கத்தானை கல்வயல் தபாற்கந்தோர் வீதியில் வதியும் 50 குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ந-9)

## இறக்குமதி தடையால்

# உள்ளூர் உற்பத்திகளுக்கு அடித்தது அதிர்ஷ்டம்!

கொழும்பு,ஏப்.8

கொவிட் 19 கொரோனா நெருக்கடி நிலையின் மத்தியில் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்குத் தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதிப்பதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சிறிய மற்றும் நடுத்தரளவுக் கைத்தொழிலாளர்கள் வரவேற்றுள்ளனர். இது தொடர்பில் சிறிய மற்றும் நடுத்தரளவுக் கைத்தொழிலாளர் கூட்டிணையின் தலைவர் நவாஸ் ரஜாப்தீன் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதித்ததன் ஊடாக உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழில் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை சிறிய, நடுத்தரளவு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர், தற்போதைய நெருக்கடி நிலையில் எதிர்கொள்ளத்தக்க சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகும். நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவலால் பெரும் சுகாதார அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதுடன், பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டிருக்கிறது. எனினும் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைப்பதற்கு, உள்நாட்டுக் கைத்தொழில் துறையினால் பங்களிப்புச் செய்யமுடியும். என்றார். (க)




# யாழ்.போதனாவுக்கு ஒரு தொகுதி மாஸ்க்

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கென ஒரு தொகுதி 'மாஸ்க்' கையளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தால் இந்த முகக்கவசங்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ஐ-7)

# ஒரே நேரத்தில் 10 ஆடுகள் இறப்பு

## மொனராகலையில் பரபரப்பு!!!

மொனராகலை, ஏப் 8

மொனராகலை, அலியாவத்தைப் பகுதியில், ஒரே நேரத்தில் 10 ஆடுகள் இறந்த சம்பவம் அந்த பகுதி மக்கள் மத்தியில் அச்ச நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அலியாவத்தைப் பகுதியிலுள்ள வீடொன்றில் வளர்க்கப்பட்டு வந்த 11 ஆடுகளில், 10 ஆடுகள் நேற்று அதிகாலை ஒரே நேரத்தில் இறந்துள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் அனைத்து ஆடுகளும் மயக்கமடைந்து வீழ்ந்த போது, மிருக மருத்துவரின் ஆலோசனைக்கு அமைய மருந்துகள் வழங்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து வழமைக்குத் திரும்பிய ஆடுகள் நேற்று அதிகாலை இறந்துள்ளதாகவும் உரிமையாளர் தெரிவித்தார். எஞ்சிய ஒரு ஆட்டுக்கு மிருக மருத்துவ அதிகாரிகள் சிகிச்சைகளை அளித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த ஆடுகள் இறந்தமைக்கான காரணம் இது வரை உறுதிப்படுத்தப்படாத நிலையில், குறித்த ஆடுகள் கொரோனா தாக்கத்தில் உயிரிழந்தனவா என்ற கோணத்திலும் பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன. (ந)



# 10 நாள்களாக தொடர்கின்றது தொற்று நீக்கல்

மூதூர், ஏப். 8

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் நோக்கில் மூதூர் ஆதார மருத்துவமனையில் கிருமித்தொற்று நீக்கும் நடவடிக்கை கடந்த 10 நாள்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்று மூதூர் பிரதேச சபைத் தலைவர் எம்.எம்.ஏ. அரூஸ் தெரிவித்தார். (த-40)

# பூஸாவில் மேலுமொரு தனிமைப்படுத்தல் பிரிவு

கொழும்பு,ஏப்.8

பூஸா இராணுவ முகாமில் மேலுமொரு தனிமைப்படுத்தல் பிரிவொன்றை அமைப்பதற்கு இராணுவத் தளபதியின் அனுமதி கிடைத்துள்ளது என்று தென் மாகாண ஆளுநரின் ஊடகச் செயலாளர் பிரதீப் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தென் மாகாண ஆளுநர் விலி கமகே இராணுவத்தளபதியிடம் விடுத்த கோரிக்கைக்கமைய, இந்த அனுமதி கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கொரோனாச் சந்தேகத்தில் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படின், தென் மாகாண சுகாதாரப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் ஏனைய அலுவலர்களைத் தனிமைப்படுத்த இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பூஸா தனிமைப்படுத்தல் முகாமில் இதுவரை வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் உட்பட பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (க-114)

# அட்டுளுகம விவகாரம்

# மஹிந்த – பஸில் கவனத்துக்கு!

கொழும்பு, ஏப்.8

கொரோனா வைரஸ் அபாய வலயங்களில் ஒன்றான களுத்துறை மாவட்டத்தின் அட்டுளுகம பிரதேசத்தில் எழுந்துள்ள மனிதாபிமான நெருக்கடி தொடர்பாக மூத்த முஸ்லிம் அரசியல்வாதியான ஏ.எச்.எம். பௌஸி, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

அதையடுத்து அந்த விவகாரத்தைக் கையாளுமாறு பிரதமர் மஹிந்த, ஜனாதிபதி விசேட செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்சவுக்குப் பணித்துள்ளார். அட்டுளுகம விவகாரம் குறித்து பஸில் ராஜபக்ச மூத்த அரசியல்வாதி பௌசியிடம், தொடர்புகொண்டு கேட்டறிந்துள்ளார்.

அங்குள்ள நிலவரம், மக்கள் வெளியே நடமாட முடியாத சூழ்நிலை, தொடரும் ஊரடங்குச் சட்டத்தால் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத பரிதாபம் எனப் பலவற்றை பௌஸி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் அட்டுளுகம விவகாரம் குறித்து கவனம் செலுத்தி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 08.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.